SUPREME AUDIT INSTITUTION OF INDIA
लोकहितार्थ सत्यनिष्ठा
Dedicated to Truth in Public Interest

सत्यमेव जयते

GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS

கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப்பார்வை

2022-23 ஆண்டுக்கானது

தமிழ்நாடு அரசு

"கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப்பார்வை" என்ற எங்களது வெளியீட்டில் இது இருபத்து ஐந்தாவது வெளியீடாகும்.

1971ஆம் ஆண்டு இந்திய தணிக்கைத் துறைத் தலைவர் (கடமைகள், அதிகாரங்கள், பணி முறைமைகள்) சட்டத்தின் கோட்பாடுகளுக்கிணங்க தமிழ்நாடு அரசின் ஆண்டுக் கணக்குகள், மாநில சட்டமன்றத்தில் வைக்கப்படுவதற்காக இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் உத்தரவுகளின்படி தயாரிக்கப்படுகின்றன. ஆண்டுக் கணக்குகளில் நிதிக் கணக்குகள் மற்றும் நிதி ஒதுக்கக் கணக்குகள் ஆகியவை அடங்கும்.

"கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப்பார்வை" என்ற இந்த வெளியீடு நிதி கணக்குகள், நிதி ஒதுக்க கணக்குகள் ஆகியவற்றின் பிரதிபலிப்பாக அரசின் செயல்பாடுகளைக் குறித்த ஒரு விரிவான பார்வையை வழங்குகின்றது. சுருக்கமான விளக்கங்கள், அறிக்கைகள், வரைபடங்கள் மூலம் இதில் தகவல்கள் தரப்பட்டுள்ளன. எங்களுடைய இந்த தொகுப்பின் விவரங்களின் முயற்சி சான்றிட்ட நிதிக் கணக்குகள் மற்றும் நிதி ஒதுக்க கணக்குகளின் ஆதாரத்தைச் சார்ந்தது. இந்த விவரங்களில் ஐயம் ஏற்படின், சான்றிட்ட மேற்படி கணக்குகளையே ஒப்புக் கொள்ளவேண்டும்.

தமிழில் தரப்பட்டுள்ள இவ்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை. ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துக் குறிப்புகளிலுமுள்ள உண்மைகளின் அர்த்தம் தமிழில் தரப்பட்டுள்ள அறிக்கையில் மாறுபடாமல் இருக்க எல்லாவித முயற்சியும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மொழி பெயர்க்கப்பட்ட இவ்வறிக்கையில் ஏதாவது சந்தேகம் எழுமானால், ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையையே அதிகாரபூர்வமானதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

தே.கி.சேகர்.

(தே.கி.சேகர்)
முதன்மை மாநில கணக்காயர்
(கணக்கு மற்றும் பணிவரவு)

இடம் : சென்னை-18
தேதி : 31.01.2024

பொருளடக்கம்

பகுதி I	ஒட்டுமொத்தப் பார்வை	பக்கம்
1.1	முன்னுரை	1
1.2	கணக்குகளின் அமைப்பு முறை	1
1.3	நிதி கணக்குகள் மற்றும் நிதி ஒதுக்க கணக்குகள்	3
1.4	நிதி ஆதாரங்களும் அவற்றை செயல்படுத்துதலும்	4
பகுதி II	**வருவாய்**	
2.1	முன்னுரை	12
2.2	வருவாய் கணக்கில் வரவுகள்	12
2.3	வரவுகளின் போக்கு	14
2.4.	மாநில வரி வருவாய் சேகரிப்பின் செயல்திறன்	15
2.5	கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநிலத்தின் பங்கான மத்திய அரசு வரிகளின் போக்கு	16
2.6	உதவி மானியங்கள்	17
பகுதி III	**செலவுகள்**	
3.1	முன்னுரை	18
3.2	வருவாய் கணக்கில் செலவுகள்	18
3.3	மூலதனச் செலவுகள்	22
3.4	மாநில நிதி செலவினம்	23
பகுதி IV	**நிதி ஒதுக்க கணக்குகள்**	
4.1	நிதி ஒதுக்க கணக்குகளின் சுருக்கம்	24
4.2	கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான மீதம்/அதிகம் குறித்த போக்கு	25
4.3	அனுமதிக்கப்பட்ட மானியங்களின் குறிப்பிடத்தக்க மீதம்	25
4.4	புது பணிக்கான செலவுகள்	30
4.5	வரவு செலவு திட்டம்/நிதி மறு ஒதுக்கம் இல்லாத செலவினம்	31
பகுதி V	**சொத்துகளும் பொறுப்புகளும்**	
5.1	சொத்துக்கள்	32
5.2	கடன் மற்றும் பொறுப்புகள்	35
5.3	அரசாங்க பொறுப்புகள்	36
5.4	உத்திரவாதங்கள் (இடைவிடாத பொறுப்புகள்)	37

பகுதி VI	பிற இனங்கள்	பக்கம்
6.1	உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிறவற்றிக்கு நிதி உதவி	39
6.2	சரக்குகள் மற்றும் சேவை வரி	40
6.3	மாநில பேரிடர் பொறுப்பு நிதி	40
6.4	ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்திடம் நிதி ஒப்படைக்கப்படாமை	41
6.5	உதவி மானியங்கள் அளித்தமைக்கு சமர்ப்பிக்கபடாத பயன்பாட்டு சான்றிதழின் நிலவரம்	42
6.6	நிலுவையில் உள்ள தற்காலிக முன்பணங்கள்	43
6.7	ஒற்றை நோடல் நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படாத தொகையின் விவரம்	44

பகுதி 1
ஒட்டுமொத்தப் பார்வை

1.1. முன்னுரை

முதன்மை மாநில கணக்காயர் (கணக்கு மற்றும் பணிவரவு) தமிழ்நாடு அரசின் வரவு செலவினங்களை தொகுத்து வழங்குகிறார். இந்த ஆரம்ப கணக்குகளின் தொகுப்பு 37 மாவட்டக் கருவூலங்கள், 09 சம்பளக்கணக்கு அலுவலகங்கள், 01 ஓய்வூதியக் கணக்கு அலுவலகம் அளிக்கும் வரவு செலவுகள் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான கொடுக்கல்/வாங்கல் (இந்திய ரிசர்வ் வங்கியின் மூலமாக நடைபெறும் பரிவர்த்தனைகள்) அடிப்படையில் தொகுக்கப்படுகிறது. பொதுப்பணித்துறை கோட்டங்கள், மற்றும் வனத்துறைக் கோட்டங்களின் வரவு செலவுகள் மாவட்டக் கருவூலங்களுடன் ஏப்ரல் 2016 முதல் இணைக்கப்பட்டு கருவூலங்கள், பொதுப்பணித்துறை/வனத்துறைக் கோட்டங்களின் கணக்குகளைத் தொகுத்தளிக்கின்றன.

அதன் அடிப்படையில் முதன்மை மாநில கணக்காயர் (கணக்கு மற்றும் பணிவரவு) வருடாந்திர நிதிக் கணக்குகளையும் நிதி ஒதுக்க கணக்குகளையும் தயாரித்து, முதன்மை மாநில கணக்காயர் (தணிக்கை-I) தணிக்கை / ஒப்புதலுக்குப் பின் இந்திய தணிக்கைத் துறை தலைவரின் சான்றளிப்புக்குப் பின் மாநில சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கிறார்.

1.2. கணக்குகளின் அமைப்பு முறை

1.2.1. பின்வரும் மூன்று பாகங்களில் அரசாங்க கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன

பாகம் I தொகு நிதி	வருவாய் மற்றும் மூலதனக் கணக்குகளின் அனைத்து வரவுகள், செலவுகள், பொதுக் கடன் மற்றும் முன் பணங்கள் ஆகியவற்றை குறிப்பிடுகிறது.
பாகம் II எதிர்பாராச் செலவு நிதி	வரவு செலவு மதிப்பீட்டில் காட்டப்படாத எதிர்பாரா நிகழ்வுகளுக்காக செலவிட ஏற்படுத்தப்பட்ட நிதி. இந்த நிதியிலிருந்து செலவினமானது பின்னர் தொகு நிதியிலிருந்து நேர் செய்யப்படும்.
பாகம் III பொதுக்கணக்கு	பொதுக் கடன்கள், வைப்பு நிதி, முன்பணங்கள், பணம் செலுத்துதல் மற்றும் அனாமத்துக் கணக்கு பரிமாற்றங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது. கடன்கள் மற்றும் வைப்புநிதிகள் அரசாங்கத்தின் திரும்பப் பெறத்தக்க கடன்களை உள்ளடக்கியது. முன்பணங்கள் அரசின் வரவாகும். பணம் செலுத்துதல் மற்றும் அனாமத்துக் கணக்கு பரிவர்த்தனைகள் ஆகியவை இறுதியில் தேவையான கணக்குத் தலைப்புகளில் பதிவு செய்வதன் மூலம் கணக்குகள் நேர் செய்யப்படுகின்றன.

1.2.2 கணக்குத் தொகுப்புகளின் விவரம்



1.3. நிதிக் கணக்குகள் மற்றும் நிதி ஒதுக்க கணக்குகள்

1.3.1 நிதிக் கணக்குகள்

நிதிக் கணக்குகள் அரசாங்கத்தின் வருவாய் மற்றும் செலவினங்களையும், மூலதனக் கணக்குகள் பொதுக் கடன், பொதுக்கணக்கு ஆகியவற்றின் நிகர இருப்பினையும் காட்டுகின்றன. நிதிக் கணக்குகள் இரண்டு பாகங்களாக விரிவான தகவல்களுடன் தயாரிக்கப்படுகின்றன. நிதிக் கணக்குகளின் தொகுதி-1, இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் சான்றுடன் வருவாய் மற்றும் செலவுகள் (வருவாய் செலவு, மூலதன செலவு, கடன் மற்றும் முன்பணங்கள் மற்றும் பொதுக்கடன்) முதலீடுகள், உத்தரவாதங்கள், மானிய உதவி மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள், கணக்குகளின் தரம் மற்றும் பிற பொருட்களின் சுருக்கம் கொண்ட கணக்குகளுக்கான குறிப்புகளையும்; தொகுதி-2, விரிவான அறிக்கைகள் (பாகம்-1) மற்றும் இணைப்புகளையும் (பாகம்-2) கொண்டுள்ளது.

2022-23 நிதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் செலவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1.3.2 வருவாய் மற்றும் செலவுகள்

(₹கோடியில்)

வரவு (மொத்தம்: ₹3,26,755)	வருவாய் (மொத்தம்: ₹2,43,749) (1+2+3)	வரி வருவாய்	1,88,954
		வரி அல்லாத வருவாய்	17,061
		உதவி மானியங்கள்	37,734
	மூலதனம் (மொத்தம்: ₹83,006) (1+2+3)	பல்வகை மூலதன வருவாய்	42
		கடன் மற்றும் முன்பணங்களை திரும்ப வசூலித்தல்	1,078
		கடன்களும் மற்ற நிதிச்சுமைகளும்*	81,886
செலவினங்கள் (மொத்தம்: ₹3,26,755)	வருவாய்		2,79,964
	மூலதனம்		39,530
	கடன் மற்றும் முன்பணங்கள்		7,261

நிகர பொதுக்கடன் (பெறப்பட்ட கடன் -திருப்பிச் செலுத்திய கடன்) +நிகர எதிர்பாராச் செலவு நிதி+நிகர பொதுக்கணக்கு (பெறப்பட்டது-திருப்பி செலுத்தியது) + நிகர ரொக்க இருப்பு (தொடக்க இருப்பு – இறுதி இருப்பு)

1.3.3 முகமைகளுக்கு மத்திய அரசாங்கத்தின் நேரடி நிதி விடுதலை

2022-23 ஆம் ஆண்டில் முகமைகளுக்கு நேரடியாக வழங்கப்பட்ட தொகை ₹27,817 கோடி. இந்த பரிமாற்றங்கள் நிதிக்கணக்கு பாகம்-2ல் இணைப்பு VI-ல் காட்டப்பட்டுள்ளது. பெரும்பான்மையான நேரடி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்ட முகமைகள். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (₹8,686 கோடி), மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டம் (₹7,501 கோடி), சென்னை உரகழகம் மற்றும் தெற்கு பெட்ரோலியம் மற்றும் தொழில் கார்ப்பரேஷன் (₹5,233 கோடி) மற்றும் வேளாண்மை துறை (₹1,607 கோடி).

1.3.4. நிதி ஒதுக்க கணக்குகள்

நிதி ஒதுக்க கணக்குகள், நிதிக் கணக்குகளின் இணைப்பாகும். நிதி ஒதுக்க கணக்குகள் மாநில அரசின் தொகுப்பு நிதியின் சாட்டிய செலவினங்களையும், சட்ட மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களையும் உள்ளடக்கியது. இவற்றில் 2 சாட்டிய நிதி ஒதுக்கீடுகளும், 54 அங்கீகரிக்கப்பட்ட மானிய கோரிக்கைகளும் உள்ளன. நிதி ஒதுக்கீடு சட்டம் 2022-23ல் மொத்த செலவினங்களுக்கு ₹3,94,256 கோடியை ஒதுக்கீடு செய்தும் ₹3,728 கோடியை குறைத்தும் (திரும்ப வசூலித்தல்) வகை செய்தது. மொத்த செலவினம் ₹3,59,166 கோடியாகவும் செலவினங்களை குறைத்த வகையில் ₹5,307 கோடியும் ஆகும்.

1.4. நிதி ஆதாரங்களும் அவற்றை செயல்படுத்துதலும்

1.4.1. வழிவகை முன்பணங்கள்

ஒரு மாநில அரசு, அதன் கடன் தீர்க்கும் திறனை தொடர்ந்து பராமரிப்பதற்காக, இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து வழிவகை முன் பணங்களைப் பெறுகிறது. ஒப்புக் கொள்ளப்பட்ட குறைந்த அளவு ரொக்க இருப்பில் (₹3.25 கோடி) குறைவு ஏற்படும் போது மிகைப்பற்று பெறுகிறது. 2022-23 ஆம் ஆண்டில் தமிழக அரசு மிகைப்பற்று மற்றும் வழிவகை முன்பணங்கள் பெறுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

1.4.2. நிதி ஓட்ட அறிக்கை

மாநிலத்தின் வருவாய்ப் பற்றாக்குறை ₹36,215 கோடி என்பது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 1.53 சதவீதமாகும். நிதிப்பற்றாக்குறையான ₹81,886 கோடி மொத்த மாநில உற்பத்தி மதிப்பில் 3.46 சதவீதமும் மொத்த செலவில் 25.06 சதவீதமுமாகும். நிதிப் பற்றாக்குறையானது (₹1,01,062 கோடி) பொதுக் கணக்கு வருவாய் இருப்பில் ஈடுகட்டப்பட்டுள்ளது.

ஏறக்குறைய 75.50 சதவீத நிதி வருவாய் (₹2,43,749 கோடி) ஏற்றுக் கொள்ளப்பட்ட செலவினம் (₹1,84,029 கோடி) பின்வருமாறு செலவிடப்பட்டுள்ளது. சம்பளங்கள் (₹44,418 கோடி), வட்டிச் செலவுகள் (₹46,911 கோடி), ஓய்வூதியங்கள் (₹30,777 கோடி), மானியங்கள் (₹29,559 கோடி), சம்பள மானியங்கள் (₹9,248 கோடி), சமூக பாதுகாப்பு மற்றும் ஏனைய ஓய்வுதியம் (₹1,407 கோடி), ஊதியங்கள் (₹59 கோடி), உள்ளாட்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு இழப்பீடு மற்றும் ஒதுக்கீடு (₹1,380 கோடி) மற்றும் அகவிலைப்படி (₹20,270 கோடி).

---

* மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (ஜிஎஸ்டிபி) என்பது பணவரையறையின்படி மாநில எல்லைக்குப்பட்ட ஒரு குறிப்பிட்ட காலத்தின் உற்பத்தி செய்யப்படும் சரக்கு மற்றும் சேவையின் அளவுகோல். 2022-23 ஆம் ஆண்டின் மாநில மொத்த உற்பத்தி மதிப்பு விவரங்கள் இந்திய அரசின் திட்டமிடுதல் துறையின் பொருளாதார ஆய்வறிக்கையின் படி மாநில மொத்த உற்பத்தி மதிப்பு ₹23,64,514 கோடி.

1.4.3 நிதி ஆதாரங்களும் அவற்றை செயல்படுத்துதலும்

(₹கோடியில்)



விவரங்கள்	தொகை
❖ ஆரம்ப ரொக்க இருப்பு 01.04.2022	284
❖ வருவாய் கணக்கில் வரவு	2,43,749
❖ மூலதன வரவுகள்	42
❖ கடன் மற்றும் முன்பணங்களை திரும்ப வசூலித்தல்	1,078
❖ பொதுக் கடன்	1,01,062
❖ சிறு சேமிப்பு, வைப்பு நிதி, மற்ற சேமிப்புகள்	9,177
❖ ஒதுக்கீட்டு நிதி	8,353
❖ பெறப்பட்ட வைப்பு தொகைகள்	1,10,314
❖ எதிர்பாராச் செலவு நிதி	..
❖ அனாமத்துக் கணக்குகள்*	6,86,401
மொத்தம்	**11,60,460**



விவரங்கள்	தொகை
❖ வருவாய் கணக்கில் செலவுகள்	2,79,964
❖ மூலதன கணக்கில் செலவுகள்	39,530
❖ வழங்கப்பட்ட கடன்	7,261
❖ பொதுக் கடன் திருப்பி செலுத்துதல்	27,104
❖ சிறு சேமிப்பு, வைப்பு நிதி, மற்ற சேமிப்புகள்	7,326
❖ ஒதுக்கீட்டு நிதி	7,329
❖ வைப்பு தொகைகள் செலவினம்	1,06,223
❖ அனாமத்துக் கணக்குகள்*	6,85,769
❖ செலுத்திய தொகைகள்	(-) 4
❖ முடிவு ரொக்க இருப்பு 31.03.2023$	(-) 42
மொத்தம்	**11,60,460**

* அனாமத்துக் கணக்குகளில் ₹3,19,121 கோடி கருவூல பட்டியல்களிலும் துறை சார்ந்த செலவுகளிலும் பணி முன் பணத்திலும் உள்ளடங்கியது. ஆதாரங்கள் பதிவில் ₹3,19,873 கோடி பதிப்புடைய கருவூல பட்டியல்கள் ரிசர்வ் வங்கியின் மூலம் விற்கப்பட்டவையும், துறை சார்ந்த வரவுகளும், நிலையான ரொக்க கையிருப்பு உள்ளடக்கியது.

$ எதிர்மறை இருப்பு என்பது வரவை விட அதிக செலவினத்தை குறிக்கும். இது வங்கிகள் வரவுகளை கருவூலத்திற்கு தெரிவிக்கபடாத காரணத்தினால் ஏற்பட்டது.

1.4.4. பணம் வரும் வகை

(₹ கோடியில்)



1.4.5. பணம் செல்லும் வகை

(₹ கோடியில்)



1.4.6. மொத்த பணபொருள் வரவு மற்றும் செலவு

வரிசை எண்	கூறுகள்	வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022-23	அசல் செலவுகள்	அசல் செலவு மதிப்பீடுகளின் சதவீதம்	அசல் செலவு மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் சதவீதம்@
					(₹கோடியில்)
1.	வரி வருவாய்*	1,76,111	1,88,954	107.29	7.99
2.	வரி அல்லாத வருவாய்	15,537	17,061	109.81	0.72
3.	உதவி தொகை மற்றும் பங்கு தொகைகள்	39,759	37,734	94.91	1.60
4.	வருவாய் வரவுகள் (1+2+3)	**2,31,407**	**2,43,749**	**105.33**	**10.31**
5.	மூலதன வரவுகள்	..	42	..	..
6.	கடன் மற்றும் முன்பணங்கள் திரும்ப வசூலித்தல்	5,230	1,078	20.61	0.05
7.	கடன்களும் மற்ற நிதிச்சுமைகளும்	96,614	81,886	84.76	3.46
8.	மூலதன வரவுகள் (5+6+7)	1,01,844	83,006	81.50	3.51
9.	மொத்த வரவுகள் (4+8)	**3,33,251**	**3,26,755**	**98.05**	**13.82**
10.	வருவாய்க் கணக்கில் செலவுகள்	2,84,188	2,79,964	98.51	11.84
11.	மூலதன கணக்கில் செலவுகள்	43,043	39,530	91.84	1.67
12.	கடன் மற்றும் முன்பணங்கள்	6,020	7,261	120.61	0.31
13.	மொத்த செலவுகள் (10+11+12)	**3,33,251**	**3,26,755**	**98.05**	**13.82**
14.	வருவாய் பற்றாக்குறை (-)/மிகை(+)** (4-10)	(-) 52,781	(-)36,215	..	..
15.	நிதி பற்றாக்குறை** [13-(4+5+6)]=7	(-)96,614	(-)81,886	..	..

@ நிலையான மூலதனத்தின் நுகர்வுக்கு எந்த ஒதுக்கீடும் செய்யப்படுவதற்கு முன்னர், ஒரு ஆண்டில், மாநிலத்தின் அனைத்து பொருட்களின் மதிப்பு மற்றும் பொருட்களின் மொத்த தொகை, மாநில மொத்த உற்பத்தி மதிப்பு என அறியப்படும் (₹23,64,514 கோடி).

* இந்திய அரசாங்கத்தின் மொத்த வருவாயில் மாநிலத்தின் (₹38,731 கோடி) பங்கு உள்ளடக்கியது.

** வருவாய் பற்றாக்குறை என்பது வருவாய் வரவினத்தை விட வருவாய் செலவினம் அதிகமானது. நிதி பற்றாக்குறை என்பது வருவாய் மற்றும் மூலதனத்தில் அதிகப் படியான செலவுகள் என்று கொள்ளலாம் (முன் பணம் கடன்கள் அளித்ததையும் சேர்த்து). வரி வருவாய், இதர வருவாய், மற்றும் கடன் மற்றும் முன்பணங்களின் வசூல்.

1.4.7 பற்றாக்குறையும் உபரிகளும் குறிப்பிடுவன எவை?

பற்றாக்குறை

● வருவாய் மற்றும் செலவினங்களின் இடைவெளியைக் குறிக்கின்றது. பற்றாக்குறையின் வகை, அதை சீர் செய்யும் வகை மற்றும் நிதிகளை கையாள்வது நிதி நிர்வாகத்தின் திறமையைக் குறிக்கும்.

வருவாய் பற்றாக்குறை/ மிகை

● வருவாய் வரவு மற்றும் வருவாய் செலவினத்தின் இடைவெளியைக் குறிக்கிறது. அரசு நிர்வாகத்தை நடத்துவதற்கு வருவாய் செலவினம், வருவாய் வரவினத்திலிருந்து மேற்கொள்ளப் பட வேண்டும்.

நிதி பற்றாக்குறை/ மிகை

● மொத்த வருவாய் (கடனை தவிர்த்து) மற்றும் மொத்த செலவுகளுக்குள் உள்ள இடைவெளியைக் குறிக்கிறது. எந்த அளவிற்கு செலவினங்கள் கடன்கள் மூலம் முறைப்படுத்தப்படுகின்றன என்பதைக் குறிக்கின்றது. இந்த கடன்கள் மூலதன திட்டங்களில் முதலீடு செய்யப்படுவதை இலட்சியமாக கொள்ள வேண்டும்.

1.4.8 வருவாய் பற்றாக்குறை / மிகை

2013-14ஆம் ஆண்டிலிருந்து வருவாய் பற்றாக்குறைக்கு திரும்பியது. 2022-23 ஆம் ஆண்டில் வருவாய் பற்றாக்குறை 2021-22ல் ₹46,538 கோடி ரூபாயிலிருந்து ₹36,215 கோடி ரூபாயாக குறைந்துள்ளது. இது முந்தைய ஆண்டை விட 22.18 சதவீதம் குறைந்துள்ளது. இதில் முக்கியமாக குறிப்பிட வேண்டியது என்னவெனில் தமிழ் நாடு நிதி பொறுப்புச் சட்டம் 2003ம் படி தமிழக அரசு இடைக்கால நிதிக் கொள்கை மற்றும் திட்டமுறை அறிக்கையைச் சமர்பித்தது. இதன்படி 2021-2022 ஆம் ஆண்டுக்குள் வருவாய் பற்றாக்குறையை முற்றிலும் நீக்க வேண்டும் என்றும் அதன்பின் அதையே கடைபிடிக்கவேண்டும் என்றும் தமிழ்நாடு நிதி பொறுப்பு சட்டம் (திருத்தம்) 2020ன் படி நிர்ணயிக்கப்பட்டது. தமிழக அரசின் வருவாய் பற்றாக்குறை ₹36,215 கோடியாக உள்ளது. இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 1.53 சதவீதம் ஆகும்.

1.4.9 வருவாய் பற்றாக்குறை/மிகை போக்கு



1.4.10. நிதி பற்றாக்குறை

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி பொறுப்புச் சட்டத்தின்படி, அரசு நிதிப்பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவிகிதத்திற்குள் மார்ச் 31, 2022க்குள் குறைக்க வேண்டும் என்றும் அதன்பின் அதையே கடைபிடிக்க வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டது.

மாநிலத்தின் நிதி பற்றாக்குறை, 2021-22ஆம் ஆண்டில் ₹81,835 கோடியிலிருந்து நடப்பாண்டில் ₹81,886 கோடி என உயர்ந்துள்ளது. இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3.46 சதவீதமாகும்.

நிதிப்பற்றாக்குறை 2018-19 முதல் 2022-23 வரையிலான காலக்கட்டத்தில் மொத்த மாநில உற்பத்தி மதிப்பின் ஒப்பீடு கிழே குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதி பற்றாக்குறையுடன் மாநில மொத்த உற்பத்தி மதிப்பு ஒப்பிடுதல்

வருடம்	நிதிப் பற்றாக்குறையுடன் சதவீதம் மாநில மொத்த உற்பத்தி மதிப்பீடு முந்திய வருடங்களுடன் ஒப்பீடு	அதிகம் / குறைவு
2018-19	2.84	(+) 0.05
2019-20	3.26	(+)0.42
2020-21	4.94	(+) 1.68
2021-22	3.96	(-) 0.98
2022-23	3.46	(-)0.50

நிதி பற்றாக்குறை போக்கு



1.4.11 மூலதன செலவினங்களில் கடன் மூலம் பெறப்படும் நிதியின் போக்கு



கடன்கள் மூலம் பெறப்படும் நிதிகளை மூலதனச் சொத்துக்களை உருவாக்கவும், வரி வருவாய் மூலம் அசல் மற்றும் வட்டியை திரும்பச் செலுத்த எச்சரிக்கையுடன் கையாளப்பட வேண்டும். இருப்பினும், மாநில அரசு நடப்பு நிதியாண்டில் பெற்ற (₹1,01,062 கோடி கடன்களில் மூலதன கணக்குகளிலிருந்து (₹39,530 கோடியானது) குறைவாக செலவழிக்கபட்டது. மீதமுள்ள (₹61,532 கோடியானது), கடன் மற்றும் முன்பணங்கள் வழங்கிட (₹7,261 கோடி), பொதுக்கடன் திரும்ப செலுத்த (₹27,104 கோடி மற்றும் வருவாய் கணக்கில் செலவினத்திற்காக (₹27,167 கோடியும்) பயன்படுத்தப்பட்டுள்ளது.

1.4.12 பொதுக்கடன் போக்கு

2022-23 ஆம் ஆண்டில் ₹87,000 கோடி மதிப்புள்ள கடன்கள் 6.63 சதவீதம் முதல் 7.99 சதவீதம் வரை வெவ்வேறு வட்டி விகிதங்களில் சமமாக உயர்த்தப்பட்டது. இவைகளிலிருந்து 2 கடன்கள் 2029-ல், 11 கடன்கள் 2032-ல், 4 கடன்கள் 2033-ல், 1 கடன் 2035-ல், 1 கடன் 2037-ல், 5 கடன்கள் 2042-ல் மீட்பு அடையும்.

கடந்த ஐந்து வருடங்களில் பொதுக்கடன் (நிகர) போக்கு கீழ்க்கண்டவாறு.

(₹கோடியில்)



2.1. முன்னுரை

அரசின் வருவாயானது, வருவாய்க் கணக்கு வரவு மற்றும் மூலதன கணக்கில் வரவு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. 2022-23ம் ஆண்டிற்கான மொத்த வருவாய் ₹3,26,755 கோடியாகும்.

2.2. வருவாய் கணக்கில் வரவுகள்

வரி வருவாய்	அரசியலமைப்பு பிரிவு 280(3)ன் கீழ் மாநில வரிகள் மற்றும் மத்திய அரசின் பங்கீடாக சேகரித்து வைத்திருக்கும் வரிகளை உள்ளடக்கியது.
வரி அல்லாத வருவாய்	வட்டி வரவுகள், ஆதாய பங்குத்தொகை மத்திய அரசின் இலாபங்கள், ஆதாய உரிமைகள் ஆகியவைகளை உள்ளடக்கியது.
உதவி மானியங்கள்	இது மத்திய அரசிடமிருந்து மாநில அரசு பெறும் உதவி ஆகும். இதையொட்டி, பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள், தன்னாட்சி அமைப்புகள் போன்ற நிறுவனங்களுக்கு மாநில அரசு மானியம் வழங்கும்.

2.2.1 வருவாய் வரவுகளின் கூறுகள் (2022-2023)

(₹கோடியில்)

கூறுகள்	அசல் செலவுகள்	மொத்த வருவாய் வரவின் சதவீதம்
அ. வரி வருவாய்*	**1,88,954**	**77.52**
பொருள் மற்றும் சேவை வரி	64,768	26.57
வருவாய் மற்றும் செலவினம் மீதான வரிகள்	25,661	10.53
சொத்து மற்றும் மூலதன பரிவர்த்தனைகளின் மீதான வரிகள்	17,818	7.31
பண்டங்கள், பணிகள் மீது ஏனைய வரிகள்	80,707	33.11
ஆ. வரி அல்லாத வருவாய்	**17,061**	**7.00**
வட்டி வரவுகள், ஆதாயபங்குத்தொகை,, இலாபங்கள்	5,048	2.07
பொதுப் பணிகள்	3,726	1.53
சமூகப் பணிகள்	6,083	2.50
பொருளாதாரப் பணிகள்	2,204	0.90
இ. உதவி மானியங்கள் மற்றும் பங்களிப்புகள்	**37,734**	**15.48**
மொத்தம்-வருவாய் வரவுகள் (அ+ஆ+இ)	**2,43,749**	**100.00**

* இதில் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வழங்கப்படும் மத்திய வரிகளின் (நிகர) வருவாய்ப் பங்கு ₹38,731 கோடியும் அடங்கும்.

2.2.1. அ. வருவாய் கணக்கின் கூறுகள்



2.2.2. வரி வருவாய்க்கு முக்கிய பங்களிப்பாளர்கள்

(₹கோடியில்)



2.3. வரவுகளின் போக்கு

முந்தைய ஆண்டை ஒப்பிடுகையில் தற்போதைய ஆண்டின் மொத்த உற்பத்தி மதிப்பு 14.48 சதவீத வளர்ச்சியை எட்டியிருந்ததுடன், மொத்த வருவாய் சென்ற ஆண்டை விட 17.47 சதவீதம் உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டை விட வரிவருவாய் 17.86 சதவீதம் உயர்ந்துள்ளது. வரி அல்லாத வருவாய் 40.81 சதவீதம் உயர்ந்தும் உதவி மானியங்கள் 7.65 சதவீதம் அதிகரித்தும் உள்ளது.

(₹கோடியில்)

	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23
வரி வருவாய்	1,36,173 (8.18)	1,33,855 (7.25)	1,31,077 (6.89)	1,60,325 (7.76)	1,88,954 (7.99)
வரி அல்லாத வருவாய்	14,200 (0.85)	12,888 (0.70)	10,422 (0.55)	12,116 (0.59)	17,061 (0.72)
உதவி மானியங்கள்	23,368 (1.40)	27,783 (1.51)	32,577 (1.71)	35,051 (1.70)	37,734 (1.60)
மொத்த வருவாய் வரவு	1,73,741 (10.44)	1,74,526 (9.45)	1,74,076 (9.15)	2,07,492 (10.05)	2,43,749 (10.31)
மாநில மொத்த உற்பத்தி மதிப்பு	16,64,159	18,45,853	19,02,689	20,65,436	23,64,514

குறிப்பு : அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் அந்தந்த ஆண்டுகளில் தற்போதைய மதிப்பில் உள்ள மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் சதவீதமாகும்.

2.3.1 துறைவாரியான வருவாய் வரி

(₹கோடியில்)

வருவாய் வரவுகள்	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23
பொருள் மற்றும் சேவை வரி	46,698 (2.81)	45,866 (2.48)	45,349 (2.38)	55,585 (2.69)	64,768 (2.74)
வருவாய் மற்றும் செலவினம் மீதான வரிகள்	18,577 (1.12)	16,050 (0.87)	15,230 (0.80)	21,824 (1.06)	25,661 (1.09)
சொத்து மற்றும் மூலதன பரிவர்த்தனைகளின் மீதான வரிகள்	11,259 (0.68)	11,123 (0.60)	11,894 (0.63)	14,553 (0.70)	17,818 (0.75)
பண்டங்கள், பணிகள் மீது வரிகள்	59,659 (3.58)	60,816 (3.29)	58,604 (3.08)	68,363 (3.31)	80,707 (3.41)
மொத்த வரி வருவாய்	**1,36,173 (8.18)**	**1,33,855 (7.25)**	**1,31,077 (6.89)**	**1,60,325 (7.76)**	1,88,954 **(7.99)**
மாநில மொத்த உற்பத்தி மதிப்பு	16,64,159	18,45,853	19,02,689	20,65,436	23,64,514

குறிப்பு : அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் அந்தந்த ஆண்டுகளில் தற்போதையை மதிப்பில் உள்ள மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் சதவீதமாகும்.

2.4 மாநில வரி வருவாய் சேகரிப்பின் செயல்திறன்

மாநிலத்தின் வரி வருவாயானது, மாநிலத்தின் சொந்த வரி வருவாய் மற்றும் மாநிலத்தின் பங்கான மத்திய அரசின் வரிகளில் இருந்து வருகிறது. வரி வருவாயின் வளர்ச்சி 2018-19ல் இருந்து 2022-23 வரை 38.76 சதவீதமாக உள்ளது. எனினும். மாநிலத்தின் சொந்த வரி வருவாய், மாநில மொத்த உற்பத்தி மதிப்புடன் ஒப்பிடுகையில் 2018-19ல் 6.34 சதவீதத்தில் இருந்து 2022-23ல் 6.35 சதவீதமாக அதிகரித்து காணப்படுகிறது.

(₹கோடியில்)

ஆண்டு	வரி வருவாய்	மாநிலத்தின் பங்கான மத்திய அரசின் வரிகள்	மாநிலத்தின் சொந்த வரி வருவாய்	மாநிலத்தின் சொந்த வரி வருவாய் மாநில மொத்த உற்பத்தி மதிப்பு சதவீதத்தில்
2018-19	1,36,173	30,639	1,05,534	6.34
2019-20	1,33,855	26,393	1,07,462	5.82
2020-21	1,31,077	24,925	1,06,153	5.58
2021-22	1,60,325	37,459	1,22,866	5.95
2022-23	1,88,954	38,731	1,50,223	6.35

2.4.1. வருவாய் சேகரிப்பின் திறன்

சரக்குகள் மற்றும் சேவைகளின் வரியானது, வரி வருவாயின் பெரும்பகுதி ஆகும். சொத்து மற்றும் மூலதன பரிவர்த்தனைகள் (வசூலிப்பு) செயல்திறன் மற்றும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி செயல்திறன் 2022-23 ஆம் ஆண்டில், ஓரளவிற்கு அதிகரித்துள்ளது.

அ. சொத்து மற்றும் மூலதன பரிவர்த்தனைகளின் மீதான வரிகள்

(₹கோடியில்)

விவரம்	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23
வருவாய் திரட்டியது	11,259	11,123	11,894	14,553	17,818
வருவாய் சேகரிப்பில் செலவு	522	587	596	688	751
வரி சேகரிப்பின் திறன் (சதவீதத்தில்)	4.64	5.28	5.01	4.73	4.21

ஆ. பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரிகள்

(₹கோடியில்)

விவரம்	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23
வருவாய் திரட்டியது	59,659	60,816	58,604	68,363	80,707
வருவாய் சேகரிப்பில் செலவு	705	845	821	846	939
வரி சேகரிப்பின் திறன் (சதவீதத்தில்)	1.18	1.39	1.40	1.24	1.16

2.5. கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநிலத்தின் பங்கான மத்திய அரசு வரிகளின் போக்கு

மாநிலத்தின் பங்கான மத்திய அரசு வரியானது, மாநிலத்தின் மொத்த வரி வருவாயுடன் ஒப்பிடுகையில் 2021-22ஆம் ஆண்டில் 23.36 சதவீதத்தில் இருந்து 2022-23ஆம் ஆண்டு 20.50 சதவீதமாக குறைந்து உள்ளது.

(₹கோடியில்)

கணக்கு தலைப்பு விவரம்	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23
பொருள் மற்றும் சேவை வரி	8,165	7,489	7,407	10,308	10,945
வருமானம் மற்றும் செலவினத்தின் மீதான ஏனைய வரிகள்	55	..	..	..	..
கூட்டு நிறுவன வரி	10,655	8,999	7,520	10,913	12,983
கூட்டு நிறுவன வரி நீங்கலாக ஏனைய வருமானம் மீதான வரிகள்	7,847	7,051	7,710	10,911	12,678
சொத்தின் மீது வரிகள்	4	0.39	..	3	..
சுங்க வரி	2,172	1,673	1,324	2,920	1,523
மத்திய ஆயத் தீர்வைகள்	1,443	1,163	838	1,754	478
சேவை வரி	282	..	108	610	60
பண்டங்கள், பணிகள் மீது ஏனைய வரிகளும் தீர்வைகளும்	16	17	18	40	64
மாநிலத்தின் பங்கான மத்திய அரசின் வரிகள்	**30,639**	**26,393**	**24,925**	**37,459**	**38,731**
மொத்த வரி வருவாய்	**1,36,173**	**1,33,855**	**1,31,077**	**1,60,325**	**1,88,954**
மொத்த வரி வருவாயின் மத்திய வரிகளின் சதவீதம்	**22.50**	**19.72**	**19.02**	**23.36**	**20.50**

2.6. உதவி மானியங்கள்

நிதியுதவி ஆணையம் பரிந்துரைத்த மானியங்கள், நிதி ஆயோக் ஒப்புதல் பெறப்பட்ட மத்திய அரசு பொறுப்பேற்கும் பணிகள், ஏனைய மாற்றங்கள் மற்றும் மாநிலங்களுக்கான மானியங்கள் ஆகியவை இந்திய அரசின் உதவியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. 2022-23 ஆம் ஆண்டில் மானிய உதவி தொகையாக மொத்த வருமானம் ₹37,734 கோடியாக இருந்தது.



2.6.1 மத்திய அரசின் உதவி மானியங்களின் போக்கு

2022-23ல் மத்திய அரசின் உதவி மானியங்கள் 2021-22 ஆம் ஆண்டைக் காட்டிலும் ₹2,683 கோடி அதிகரித்துள்ளது.

உதவி மானியங்கள்



பகுதி 3
செலவுகள்

3.1. முன்னுரை

அரசின் செலவுகள், வருவாய்க் கணக்கில் செலவுகள் மற்றும் மூலதனக் கணக்கில் செலவுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. அரசின் அன்றாட செலவுகளை சந்திக்க வருவாய் கணக்கில் செலவுகள் பயன்படுத்தப்படுகிறது. மூலதனச் செலவு நிரந்தர சொத்துக்கள், கட்டிடங்கள், சாலைகள் மற்றும் பாலங்கள் உருவாக்க அல்லது அத்தகைய சொத்துக்களின் பயன்பாட்டை அதிகரிக்க அல்லது நிரந்தர கடன்களை குறைக்க பயன்படுகிறது. மேலும் இச்செலவுகள், பொதுவான பணிகள், சமூகப் பணிகள் மற்றும் பொருளாதார பணிகள் என துறைவாரியாக பகிர்ந்தளிக்கப்படுகிறது அவற்றின் விவரம் பின்வருமாறு:

பொதுப்பணிகள்	நீதித்துறை, வட்டி கொடுத்தல், காவல், சிறைச்சாலை, பொதுப்பணித் துறை, ஓய்வூதியம் போன்ற துறைகள் அடங்கும்.
சமூகப்பணிகள்	கல்வி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலம், குடிநீர் வழங்கல், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், சமூகபாதுகாப்பு, ஊட்டச்சத்து மற்றும் இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு போன்ற துறைகள் அடங்கும்.
பொருளாதாரப் பணிகள்	விவசாயம், ஊரக வளர்ச்சி, நீர்ப்பாசனம், கூட்டுறவு, எரிசக்தி, தொழிற்சாலைகள், போக்குவரத்து, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை போன்ற துறைகள் அடங்கும்.

3.2. வருவாய் கணக்கில் செலவுகள்

2022-23 ஆம் ஆண்டிற்கான வருவாய்க் கணக்கின் செலவுகள் ₹3,05,687 கோடியாக மதிப்பிடப்பட்டது. (மாநில அரசு நிதிநிலை மதிப்பீடுகளில் வருவாய் செலவுகளுக்காக ₹2,84,188 கோடியாக மதிப்பிடப்பட்டது. மாநில அரசு ₹1,722 கோடி நவம்பர் 2022லும் ₹19,777 கோடி மார்ச் 2022லும் துணை மானியக் கோரிக்கையாக பெற்றது.) வருவாய் கணக்கு செலவின் மொத்த திட்ட மதிப்பீடு ₹2,79,964 கோடியாகும். எனினும் வருவாய் கணக்கு செலவுகள் நிதிநிலை திட்ட மதிப்பீட்டை விட ₹4,224 கோடி குறைந்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் நிதி நிலை திட்ட மதிப்பீடுகளுக்கு குறைவான / அதிகமான வருவாய்க் கணக்கிலான செலவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(₹கோடியில்)

விவரம்	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23
நிதி நிலை மதிப்பீடுகள்	1,93,742	2,12,036	2,40,993	2,61,189	2,84,188
ஆனசெலவு	1,97,201	2,10,435	2,36,402	2,54,030	2,79,964
இடைவெளி வித்தியாசம்	(-) 3,459	1,601	4,591	7,159	4,224
நிதி நிலை மதிப்பீட்டின் இடைவெளி வித்தியாசம் சதவீதத்தில்	(-) 1.78	0.75	1.91	2.74	1.49

சுமார் 65.73 சதவீதம் வருவாய் கணக்கில் ஏற்றுக்கொள்ளப்ட்ட செலவினமாக, சம்பளம் (₹44,418 கோடி), வட்டி கொடுத்தல் (₹46,911 கோழி), ஓய்வூதியங்கள் (₹30,777 கோழி), மானியம் (₹29,559 கோழி), சம்பள மானியங்கள் (₹9,248 கோழி). சமூக பாதுகாப்பு மற்றும் பிற ஓய்வூதியம் (₹1,407 கோழி), கூலி (₹59 கோழி), அகவிலைப்படி (₹20,270 கோழி) மற்றும் உள்ளாட்சி மன்றங்களுக்கான ஒப்படைப்பு (₹1,380 கோழி) என உறுதி செய்யப்பட்டது.

கடந்த ஐந்தாண்டுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்படாத வருவாய்கணக்கில் செலவுகளின் நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(₹கோடியில்)

விவரம்	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23
வருவாய் செலவினம்	1,97,201	2,10,435	2,36,402	2,54,030	2,79,964
வருவாய் வரவுகள்	1,73,741	1,74,526	1,74,076	2,07,492	2,43,749
ஏற்றுக் கொள்ளப்பட்ட செலவினம்	1,32,156	1,43,179	1,49,399	1,54,491	1,84,029
ஏற்றுக் கொள்ளப்படாத செலவினம்	65,045	67,256	87,003	99,539	95,935
ஏற்றுக் கொள்ளப்பட்ட செலவினத்திற்கு வருவாய் வரவுகள் (சதவிகிதத்தில்)	76.06	82.03	85.82	74.46	75.50
ஏற்றுக் கொள்ளப்பட்ட செலவினத்திற்கு மொத்த வருவாய் செலவினம் (சதவிகிதத்தில்)	67.01	68.04	63.20	60.82	65.73

3.2.1. வருவாய் கணக்கில் செலவினம் VS ஏற்க்கப்பட்ட வருவாய் கணக்கில் செலவினம்

(₹கோடியில்)



வருவாய் கணக்கில் வரவினம் VS ஏற்கப்பட்ட வருவாய் கணக்கில் செலவினம்

(₹கோடியில்)



3.2.2 ஏற்றுக் கொள்ளப்பட்ட செலவினத்தின் போக்கு



அரசின் ஏற்றுக் கொள்ளப்பட்ட செலவினங்களின் அதிகரிப்பு போக்கு அரசின் மற்ற முன்னேற்ற திட்டங்களுக்கு வழிவகை செய்ய முடியாத நிலையை ஏற்படுத்துகிறது.

3.2.3 ஏற்றுக் கொள்ளப்பட்ட வருவாய் கணக்கு செலவினம் மற்றும் பிற வருவாய் கணக்கு செலவினங்களின் போக்கு

2022-23 ஆண்டில் மொத்த வருவாய் கணக்கின் செலவினம் ₹2,79,964 கோடியாக இருந்தது. இதில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வருவாய் கணக்கு செலவினம் ₹1,84,029 கோடியாகவும் பிற வருவாய் கணக்கு செலவினங்கள் ₹95,935 கோடியாகவும் உள்ளது. ஏற்றுக் கொள்ளப்பட்ட வருவாய் செலவினம் அரசினால் ஏற்கப்பட்ட சம்பளம், வட்டி பட்டுவாடா, ஓய்வூதியம் மற்றும் பிற செலவினங்களுக்கானது.

(₹கோடியில்)



3.2.4 வருவாய் கணக்கு செலவுகளின் முக்கிய கூறுகள்

(₹கோடியில்)



*பொதுச் சேவைகள்-கணக்கு பெருந்தலைப்பு 2049 (வட்டி பட்டுவாடா) நீங்கலாக, கணக்கு பெருந்தலைப்பு 3604 (இழப்பீடு மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள்) உள்ளிட்டதாகும்.

3.2.5 வருவாய் கணக்கு செலவுகளின் துறைவாரியான விநியோகம்

வருவாய் செலவினம் வரிவிதிப்புப் பணிகள், மாநில அரசின் அமைப்புகள், வட்டி பட்டுவாடா, ஓய்வூதியம், சமூக, பொது மற்றும் பொருளாதார பணிகளுக்கு பிரித்து தரப்படுகிறது. மாநில அரசு 2022-23 ஆண்டில் ₹1,699 கோடி வரி வசூலிலும், ₹1,978 கோடி சட்டமன்றம், ஆளுநர் அலுவலகம் மற்றும் நீதி வழங்கலிலும், ₹47,544 கோடி கடன் சேவை மற்றும் வட்டி செலுத்துதலிலும், ₹14,340 கோடி நிர்வாக பணிகளிலும், ₹33,536 கோடி ஒய்வுதியம் மற்றும் பல்வகை பொது பணிகளிலும், ₹88,967 கோடி சமூக பணிகளிலும், ₹71,974 கோடி பொருளாதார பணிகளிலும், ₹19,926 கோடி உதவி மானியம் மற்றும் பங்களிப்புகளிலும் செலவிடப்பட்டுள்ளது. வருவாய் கணக்கு செலவினத்தின் மொத்த துறைவாரியான விநியோகம் ₹2,79,964 கோடியாகும்.

கூறுகள்	தொகை (₹கோடியில்)	சதவீதத்தில்
அ. பொது சேவைகள்		
அ (I). மாநில அரசின் அமைப்புகள்	1,978	0.71
அ (II). நிதி சேவைகள்	1,699	0.60
சொத்து மற்றும் மூலதன பரிவர்த்தனைகளின் மீதான வரிகள்	751	0.27
பண்டங்கள் மற்றும் பணிகள் மீது ஏனைய வரிகள்	939	0.33
பிற வரிவித்திப்பு பணிகள்	9	..
அ (III). வட்டி கொடுத்தல் மற்றும் கடன் தொகை பணிகளும்	47,544	16.98
அ (IV). நிர்வாக பணிகள்	14,340	5.12
அ (V). ஒய்வூதியம் மற்றும் இதர பொது பணிகள்	33,536	11.98
ஆ. சமூகப் பணிகள்	88,967	31.78
இ. பொருளாதார பணிகள்	71,974	25.71
ஈ. உதவி மானியங்கள் மற்றும் பங்களிப்புகள்	19,926	7.12
மொத்த செலவினம் (வருவாய் கணக்கு)	2,79,964	100.00

3.3. மூலதனச் செலவுகள்

2022-23 ஆண்டிற்கான ₹46,791 கோடி (கடன் மற்றும் முன் பணங்கள் வழங்கியது ₹7,261 கோடி உட்பட) மூலதன வரவு செலவு பட்டுவாடா மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 1.98 சதவீதமாகும். இது ₹2,272 கோடி மொத்த வரவு செலவு மதிப்பீட்டில் குறைவாக இருந்தது.

3.3.1. மூலதனச் செலவீனத்தின் துறைவாரியான விநியோகம்

மூலதனச் செலவினம் பொதுப் பணிகள், பொருளாதாரப் பணிகள், சமூகப் பணிகள் மற்றும் கடன் மற்றும் முன் பணம் வழங்கல் ஆகிய துறைகளிடையே பிரித்து தரப்படுகிறது. 2022-23 மூலதனச் செலவுகள் ₹46,791 கோடியாக முந்தைய ஆண்டைவிட ₹6,139 கோடி அதிகரித்துள்ளது.

3.3.2. கடந்த ஐந்து ஆண்டுகளின் மூலதனச் செலவினத்தின் துறைவாரியான விநியோகம்

(₹கோடியில்)

விவரம்	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23
பொதுப் பணிகள்	858 (2.79)	1,065 (3.59)	937 (2.54)	780 (1.92)	1041 (2.23)
சமூகப் பணிகள்	6,996 (22.72)	5,860 (19.76)	10,831 (29.35)	14,985 (36.86)	14,324 (30.61)
பொருளாதாரப் பணிகள்	16,457 (53.45)	18,707 (63.09)	21,300 (57.72)	21,246 (52.26)	24,165 (51.64)
கடன் மற்றும் முன்பணங்கள்	6,478 (21.04)	4,022 (13.56)	3,834 (10.39)	3,641 (8.96)	7,261 (15.52)
மொத்தம்	30,789	29,654	36,902	40,652	46,791

குறிப்பு : அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் மொத்த மூலதன செலவினத்தை சதவீதத்தில் குறிப்பிடுவன

3.4 மாநில நிதி செலவினம்

2017-18ல் திட்டமிட்ட / திட்டமிடாத திட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டதால், செலவினங்கள் மாநில நிதிச் செலவினம் மற்றும் மத்திய உதவி திட்டங்கள் என வகைப் படுத்தப்பட்டன.

2022-23ல் மாநில நிதி வருவாய் செலவினமாக ₹2,52,292 கோடியாகவும் மூலதன செலவு ₹32,656 கோடியாகவும் உள்ளது. நிகர கடன் வழங்குவதில் ₹7,261 கோடி வருவாய் மூலதனம் மற்றும் கடன் மற்றும் முன்பணங்கள் அடங்கும். மத்திய நிதி உதவியில் வருவாய் செலவினம் ₹27,672 கோடியாகவும், மூலதனச் செலவுகளில் ₹6,873 கோடியாகவும் உள்ளது.

பகுதி 4
நிதி ஒதுக்க கணக்குகள்

மாநில அரசின் ஒவ்வொரு துறையிலிருந்தும் ஆண்டுக்கு ஆகும் செலவினங்களைக் கணக்கிட்டு மானியக் கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. மாநில அரசின் சட்டமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டத்தின் படி, மேற்படி மானியக் கோரிக்கைக்களுக்கான நிதி ஒதுக்கப்படுகிறது. ஒவ்வொரு துறையும் “அனுமதிக்கப்பட்டது”, ”சாட்டியது” என்ற அடிப்படையில் மானியத்திற்கான கோரிக்கைகளை சட்ட மன்றத்தின் ஒப்புதலுக்காகத் தயாரிக்கிறார்கள்.

தமிழ்நாடு அரசின் 2022-23 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி மொத்தச் செலவினமாக ₹3,94,256 கோடியும் செலவினக் குறைப்பாக (பிடித்தங்கள்) ₹3,728 கோடியும் வழங்கப்பட்டது. இதில் உண்மையான மொத்தச் செலவினம் ₹3,59,166 கோடியாகவும், செலவினக் குறைப்பு ₹5,307 கோடியாகவும் இருந்தன. இந்த உள்ளபடியான செலவினம் ₹35,090 கோடிகளை மிச்சப்படுத்தியுள்ளது (8.90 சதவீதம்).

நிதி ஒதுக்கீட்டுக் கணக்கு என்பது நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி குறிப்பிட்ட ஆண்டுக்கான மானிய வாரியான விரிவான செலவின் அறிக்கையாகும். மேலும் இது இறுதிமானிய அல்லது நிதி ஒதுக்கீடு குறித்த செலவினங்கள் அல்லது சேமிப்பு குறித்த விரிவான வகைப்படுத்தப்பட்ட ஆண்டறிக்கை போன்றதாகும். நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியானது, தொகுக்கப்பட்ட மாநில நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டதாகும்.

4.1. நிதி ஒதுக்க கணக்குகளின் சுருக்கம்

(₹கோடியில்)

செலவின் தன்மை	முதலில் அனுமதிக்கபட்ட மானியம்	துணை மானியம்	மொத்தம்	ஆன செலவு	நிகர மீதம்	ஒப்பளிப்பு
வருவாய் அனுமதிக்கப்பட்டது	2,36,831	21,307	2,58,138	2,36,906	21,232	21,078
சாட்டியது	51,055	192	51,247	48,123	3,125	3,193
மூலதனம் அனுமதிக்கப்பட்டது	43,068	5,201	48,269	39,548	8,721	8,758
சாட்டியது	5	231	236	224	12	12
பொதுக்கடன் சாட்டியது	27,128	...	27,128	27,104	23	23
கடன்களும் முன் பணங்களும் அனுமதிக்கப்பட்டது	6,020	3,218	9,238	7,261	1,977	1,976
எதிர்பாராச் செலவு நிதிக்கு நிதி ஒதுக்க கணக்குகளின் படி அனுமதிக்கப்பட்டது	..	..	..	..	..	..
மொத்தம்	**3,64,107**	**30,149**	**3,94,256**	**3,59,166**	**35,090**	**35,040**

4.2. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான மீதம்/அதிகம் குறித்த போக்கு

(₹கோடியில்)

நிதி ஆண்டு	மீதம்(-)/அதிகம்(+)				மொத்தம்
	வருவாய்	மூலதனம்	பொது கடன்	கடன்களும் முன்பணங்களும்	
2018-19	(-)10,248	(-)7,985	(-)290	(-)1,301	(-)19,824
2019-20	(-) 13,019	(-)11,464	(-)63	(-)2,548	(-)27,094
2020-21	(-)33,363	(-)8,084	(-)75	(-)3,696	(-)45,219
2021-22	(-)17,649	(-)9,769	(-)120	(-)2,840	(-)30,378
2022-23	(-)24,357	(-)8,733	(-)23	(-)1,977	(-)35,090

4.3 அனுமதிக்கபட்ட மானியங்களின் குறிப்பிடத்தக்க மீதம்

நிதி ஒதுக்க கணக்கு, மாநில கணக்காய்வு தலைவரால், மானிய வாரியாக, தலைப்பு வாரியாக, திட்ட வாரியாக தயாரிக்கப்படுகிறது. இக்கணக்கு உட்தலைப்பு வாரியாக திட்டங்களில் ஏற்படும் மிகை/மீதம் ஆகியவற்றுக்கு விளக்கம் தருகிறது. மீதம் என்பது, பங்கிட்டு அளித்த கணக்கில் குறைவாக செலவழித்த அல்லது சில திட்டங்களை செயல்படுத்தாதது ஆகும். இது செயல்படுத்தப்படாத அல்லது காலதாமதமாக செயல்படுத்திய திட்டத்தினைக் குறிப்பிடுகிறது. மிகை என்பது மானியபங்கீட்டை விட அதிகமாக செலவு செய்ததை குறிப்பிடுகிறது.

4.3.1. சில மானியங்களின் தொடர் மீதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

(₹கோடியில்)

மானிய எண்	கணக்கு தலைப்பு	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23
01	மாநில சட்டமன்றம் (வருவாய்) (சாட்டியது)	*0.27*	*0.17*	*0.22*	*0.27*	*0.57*
02	ஆளுநர் மற்றும் அமைச்சரவை (வருவாய்) (அனுமதிக்கப்பட்டது)	4.05	6.84	12.78	12.07	7.08
	வருவாய் (சாட்டியது)	*2.55*	*1.31*	*2.41*	*0.87*	*4.16*
04	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (மூலதனம்) (அனுமதிக்கப்பட்டது)	75.90	42.55	103.95	177.81	50.58
05	வேலாண்மை மற்றும் உழவர் நலத்துறை (மூலதனம்) (அனுமதிக்கப்பட்டது)	113.29	160.65	100.60	295.40	103.29
09	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை (வருவாய்) (அனுமதிக்கப்பட்டது)	114.75	142.35	245.67	413.55	69.17
11	முத்திரைதாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிகவரி மற்றும் பதிவுதுறை) (வருவாய்) (அனுமதிக்கப்பட்டது)	40.19	36.28	69.59	35.92	31.53
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) (மூலதனம்) (அனுமதிக்கப்பட்டது)	69.50	270.72	350.99	774.06	28.24
14	எரிசக்தி துறை (கடன்) (அனுமதிக்கப்பட்டது)	456.19	475.59	1,148.29	485.72	1,464.18
15	சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) (கடன்) (அனுமதிக்கப்பட்டது)	20.01	20.00	1.05	1.15	0.25
16	நிதித்துறை (மூலதனம்) (அனுமதிக்கப்பட்டது)	768.90	768.41	500.00	572.64	675.45
	கடன் (அனுமதிக்கப்பட்டது)	23.74	37.43	64.26	62.43	71.89

(₹கோடியில்)

மானிய எண்	கணக்கு தலைப்பு	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23
19	மக்கள் மருத்துவம் நல்வாழ்வுத்துறை (வருவாய்) (சாட்டியது)	*0.85*	*1.24*	*1.45*	*0.93*	*0.46*
20	உயர் கல்வித்துறை (மூலதனம்) (அனுமதிக்கப்பட்டது)	38.63	45.84	132.17	169.08	172.49
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை (மூலதனம்) (அனுமதிக்கப்பட்டது)	1,990.87	2,865.26	1,407.31	2,797.83	2,247.78
22	காவல் உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வுதுறை (மூலதனம்) (அனுமதிக்கப்பட்டது)	28.37	29.40	178.17	274.21	126.83
	கடன் (அனுமதிக்கப்பட்டது)	5.00	3.61	1.69	4.81	11.94
23	தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் (உள்துறை மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத்துறை (வருவாய்) (அனுமதிக்கப்பட்டது)	25.92	33.87	64.22	21.33	42.29
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை) (வருவாய்) (அனுமதிக்ப்பட்டது)	9.78	13.19	22.49	40.58	28.90
29	சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை) (மூலதனம்) (அனுமதிக்கப்பட்டது)	33.33	137.29	56.65	8.98	60.51
31	தகவல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை (வருவாய்) (அனுமதிக்கப்பட்டது)	35.61	46.98	45.00	19.70	109.17

(₹கோடியில்)

மானிய எண்	கணக்கு தலைப்பு	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23
32	தொழில்லாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுதுறை (மூலதனம்) (அனுமதிக்கப்பட்டது)	38.78	27.22	19.57	14.31	56.47
38	பொதுதுறை (வருவாய்) (அனுமதிக்கப்பட்டது)	99.98	80.45	58.50	94.99	51.14
	(வருவாய்) (சாட்டியது)	*0.08*	*0.88*	*0.36*	*6.67*	*0.31*
40	நீர்வளத்துறை (மூலதனம்) (அனுமதிக்கப்பட்டது)	1,336.56	1,514.88	1,534.52	1,329.78	819.66
43	பள்ளிக் கல்வித் துறை (மூலதனம்) (அனுமதிக்கப்பட்டது)	78.69	163.68	145.59	26.53	327.42
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) (வருவாய்) (அனுமதிக்கப்பட்டது)	20.18	5.97	9.59	11.86	13.03
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) (வருவாய்) (அனுமதிக்கப்பட்டது)	28.89	26.61	125.30	38.66	32.62
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை (வருவாய்) (அனுமதிக்கப்பட்டது)	16.13	21.96	121.15	63.54	69.64

மீதத்திற்கான காரணம் மானிய வாரியாக நிதி ஒதுக்க கணக்கில் கூறப்பட்டுள்ளது. தொடர் மீதம், மானிய கோரிக்கையில் உள்ள குறைகளை ஆய்வு செய்தல் வேண்டும் என்பதை குறிப்பிட்டு காட்டுகிறது.

மேலும் கூடுதலாக துணை மானியங்கள் கோரப்பட்டது தேவையற்றதாக நிரூபிக்கப்பட்டது. சில சந்தர்பங்களில் முதலில் அனுமதிக்கப்பட்ட மானியத்தை விட மீதமானது தேவையற்றதாக நிரூபிக்கப்பட்டன. ஒரு சில நிகழ்வுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(₹கோடியில்)

மானிய எண்	கணக்கு தலைப்பு	அசல்	துணை மதிப்பீடு	செலவினம்
3	நீதி நிர்வாகம் 2014.00.107.I.AA	24.00	2.28	23.18
6	கால் நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை) 2415.03.277.I.AA	275.19	6.44	212.52
9	பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுப்பான்மையினர் நலத்துறை 2225.03.277.I.AA	183.76	*	163.31
	2225.03.277.I.BC	114.06	*	98.64
	2225.80.101.I.AF	39.14	*	35.21
10	வணிகவரிகள் (வணிகவரி மற்றும் பதிவுத்துறை) 2040.00.001.I.AA	41.58	*	41.26
	2040.00.101.I.AA	69.00	0.35	67.54
19	மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை 2210.05.105.I.AL	596.73	2.65	569.03
	2210.06.101.I.AB	17.53	*	15.78
20	உயர்கல்வித் துறை 2202.03.103.I.AB	319.42	*	310.50
	4202.01.203.I.JB	247.78	3.00	154.34
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை 5054.03.101.I.JG	132.31	7.32	63.47
	5054.80.800.I.JT	268.04	41.00	166.92
22	காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்ததீர்வைத் துறை) 2055.00.109.I.AA	4,527.16	0.75	4,243.16
29	சுற்றுலா கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) 2205.00.103.I.AB	13.55	*	11.49

38	பொது துறை 2052.00.090.I.AA	43.82	1.08	39.84
	2052.00.090.I.AM	22.59	4.48	20.11
41	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை 2029.00.001.I.AA	17.56	*	16.54
	2029.00.102.I.AG	179.63	*	164.86
	2053.00.094.I.DX	84.40	*	45.20
45	சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை 2236.02.101.I.UG	94.86	*	86.57
	2236.02.101.I.UL	23.72	*	20.31
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை) 2202.03.102.I.AI	28.93	0.95	28.01

*ரூபாய் ஆயிரம் மட்டும் துணை மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

4.4. புது பணிக்கான செலவுகள்

கீழ் கண்ட கணக்குத் தலைப்பில் செலவினங்கள் நிதி ஒதுக்கீடு, மறு நிதி ஒதுக்கீடு ஆகியவற்றையும் மீறி புதுப் பணிகள் என்ற தலைப்பில் (புது பணிகள் விதிகள்/புது பணிகளின் கருவி) விதிகளுக்கு மீறி மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட செலவுகள் சட்ட பேரவையின் அதிகார வரம்புக்கு உட்பட்டதாக கருதப்படாது.

(₹லட்சத்தில்)

மானிய எண்	கணக்கு தலைப்பு	மொத்த மானியம் (மறு ஒதுக்கீடு)	அசல் செலவு
5	2401.00.104.AD	1.10	1.10
5	2401.00.107.JA	0.76	0.76
19	2210.01.001.AS	4.81	4.81
29	3452.01.101.PA	1.65	1.65
39	4210.02.103.JA	17.48	17.48
43	4202.01.202.JH	2.90	2.90
44	2851.00.102.MC	3.37	3.37
45	2235.02.103.UO	8.02	8.02

4.5. வரவு செலவுத் திட்டம் / நிதி மறு ஒதுக்கம் இல்லாத செலவினம்

கீழ் கண்ட தலைப்புகளில் உள்ள செலவுகள், வரவு செலவுத் திட்டத்திலோ/மறு நிதி ஒதுக்கத்தின் மூலம் வராத தலைப்புகளில் செலவு செய்யப்பட்டுள்ளது. இது முறை கேடான செலவு ஆகும்.

(₹லட்சத்தில்)

மானிய எண்	கணக்கு தலைப்பு	செலவுகள்
4	2225.02.277.SA	0.51
5	2401.00.108.UD	143.99
5	2408.01.103.AD	52.83
5	2408.01.103.UA	245.76
5	2408.01.793.AA	1.14
5	2408.01.793.UA	45.18
5	2408.01.794.AA	0.49
5	2408.01.794.UA	6.70
26	2216.02.190.UH	0.01
26	2216.02.190.UK	0.01
34	2217.05.191.AJ	5,600.00
34	2217.05.800.AB	14.35
34	3604.00.192.SD	8,047.50
34	4217.03.051.UA	0.01
34	4217.60.051.UA	0.01
34	7610.00.201.AY	39.14

5.1. சொத்துக்கள்

கணக்குகள் கணக்கீட்டு காலத்தில் நடைபெற்ற பண வரவு மற்றும் செலவுகளை குறிக்கின்றன. அரசு முதலீடுகள் போன்ற பொருள் சொத்துக்கள் மற்றும் நிதி சொத்துக்கள் வரலாற்று செலவில் காட்டப்படுகின்றன, அதாவது, கையகப்படுத்திய / வாங்கிய ஆண்டின் மதிப்பு. பொருள் சொத்துக்கள் மீதான தேய்மானம் கணக்கிடப்படவில்லை.

நடப்பு கணக்கியல் காலத்தில் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் ஓய்வூதிய சலுகைகள் கணக்குகளில் பிரதிபலிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அரசாங்கத்தின் ஓய்வூதிய பொறுப்பு அதாவது, அதன் ஊழியர்களின் கடந்த கால பணிக்கு ஓய்வூதிய சலுகைகளை செலுத்துவதற்கான பொறுப்பு கணக்குகளில் சேர்க்கப்படவில்லை. தமிழக அரசின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய விவரங்கள் நிதிக் கணக்குகள் தொகுதி 1 ன் அறிக்கை எண் 1 ல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

5.1.1. முதலீடுகள் மற்றும் வருமானம்

நிறுவனங்கள்/கழகங்கள் அளித்த விவரங்கள் நிதிக் கணக்குகளில் சேர்க்கப்பட்டுள்ளன. நிதி நிறுவனம் அல்லாத பொதுத்துறை நிறுவனங்களில் (பி.எஸ்.யூ) பங்கு மூலதனமாக மொத்த முதலீடுகள் 2022-23 இறுதியில் ₹44,526 கோடியாக இருந்தது. இருப்பினும், இந்த ஆண்டில் முதலீடுகள் மீது பெறப்பட்ட ஆதாய பங்குத்தொகை ₹301 கோடி (0.68 சதவீதம்) ஆகும். 2022-23 ஆம் ஆண்டில் முதலீடுகள் ₹2,359 கோடி (நிகர) அதிகரித்துள்ளன மற்றும் ஆதாய பங்குத்தொகையின் வருமானம் ₹29 கோடி உயர்ந்துள்ளது. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி கழகத்தில் (₹949 கோடி) பெரும்பான்மை முதலீடாக செய்யப்பட்டது.

(₹கோடியில்)

இயல்பு	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23
முதலீடுகள்	36,480	39,866	41,578	42,167	44,526
ஆதாய பங்குத் தொகை	156	192	205	272	301
வருமானம் சதவீதத்தில்	0.43	0.48	0.49	0.65	0.68

5.1.2. ரொக்க இருப்பு மற்றும் ரொக்க இருப்புகளின் முதலீடு

ரிசர்வ் வங்கியுடன் பண இருப்பு 1 ஏப்ரல் 2022 அன்று ₹284 கோடியாக இருந்தது. 2023 மார்ச் மாதம் இறுதியில் ₹(-)42 கோடி குறைந்துள்ளது. கருவூல பட்டியல்களின் பண இருப்பு முதலீடு 1 ஏப்ரல் 2022ல் ₹14,876 கோடியிலிருந்து 31 மார்ச் 2023 அன்று ₹14,124 கோடியாக குறைந்துள்ளது. இந்த ஆண்டில் செய்யப்பட்ட பண இருப்பு முதலீடுகளின் மீதான வட்டி ₹130 கோடி.

பண இருப்பு மற்றும் பண இருப்பு முதலீடு ஆகியவற்றின் நிலை பின்வருமாறு :

பண இருப்பு மற்றும் முதலீடு

(₹கோடியில்)

உறுப்புகள்	1 ஏப்ரல் 2022 அன்று	31 மார்ச் 2023 அன்று	நிகர அதிகரிப்பு(+)/ குறைவு(-)
ரொக்க இருப்புகள்*	284	(-)42	(-)326
ரொக்க இருப்பிலிருந்து முதலீடு (மத்திய கருவூல செலவு சீட்டு)	14,876	14,124	(-)752
இதர ரொக்க இருப்புகள்	12	11	(-)1
(அ) துறை வாரியான இருப்புகள்	4	4	..
(ஆ) நிலையான ரொக்க கையிருப்பு**	8	7	(-)1
ஒதுக்கப்பட்ட நிதி இருப்புகளிலிருந்து முதலீடு	57,215	67,248	(+)10,033
(அ) உத்திரவாத மீட்பு நிதி	1,008	2,139	(+)1,131
(ஆ) ஏனைய நிதிகள்	56,207	65,109	(+)8,902
கிடைத்த வட்டி***	121	130	(+)9

* கழித்தல் இருப்பு 31.03.2023ல் என்பது ரசீதுகளுக்கு மேலான செலவினங்களைக் குறிக்கிறது. அவற்றின் பெரும்பாலானவை முகமை வங்கிகள் சம்பளம் கருவூலத்திற்கு தெரிவிக்காமல் இருந்தவை.

** இந்த நிலையான ரொக்க கையிருப்பு தாசில்தார்கள், கருவூல அதிகாரிகள் மூலம் பரமரிக்கப்படுகிறது.

*** இதில் உத்தரவாத மீட்பு நிதியிலிருந்து (₹34 கோடி) முதலீடுகளுக்கான வட்டி அடங்கும்.

5.1.3. மாநில அரசு வழங்கிய கடன்கள் மற்றும் முன்பணங்கள்

2022-23 ஆம் ஆண்டு இறுதியில் மாநில அரசால் கொடுக்கப்பட்ட மொத்த கடன்கள் மற்றும் முன்பணங்கள் ₹7,261 கோடி.

(₹கோடியில்)

துறைவாரியான பணிகள் / கடனாளிகள்	2022-23
சமூகத் துறை	4,558
பொருளாதாரத் துறை	2,383
அரசு பணியாளர்களுக்கான கடன்கள்	320

5.1.4 மாநில அரசுத்துறை வாரியாக கடன்கள் மற்றும் முன்பணங்களின் சுருக்கம்

(₹கோடியில்)

துறை	1 ஏப்ரல் 2022 அன்று இருப்பு	இந்த வருட செலவுகள்	இந்த வருடத்தில் திருப்பி செலுத்தியது	கடன் மற்றும் முன்பணங்கள் தள்ளுபடி செய்தது	31 மார்ச் 2023 அன்று இருப்பு	இந்த வருட நிகர அதிகரிப்பு (+)/ குறைப்பு (-)
சமூகம்	14,777	4,558	456	..	18,879	(+)4,102
பொருளாதாரம்	21,449	2,383	386	..	23,446	(+)1,997
அரசு பணியாளர்கள்	1,245	320	236	..	1,329	(+)84
பல்வகை	(-)599	..	..	..	(-)599	..
மொத்தம்	36,872	7,261	1,078	..	43,055	(+)6,183

5.1.5. மாநில அரசால் கடன்கள் மற்றும் முன்பணங்களை கணிசமாக வழங்குதல்

31 மார்ச் 2023 நிலவரப்படி ₹43,055 கோடி மாநில அரசால் பெறப்பட இருந்தது. அளவு அதிகரிப்பு/ குறைவு பற்றிய பகுப்பாய்வோடு நிதிக் கணக்குகளின் தொகுதி 1 ன் அறிக்கை 7 ல் மாநில அரசின் கடன்கள் மற்றும் முன்னேற்றங்களின் சுருக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. விரிவான அறிக்கைகள் நிதிக் கணக்குகளின் தொகுதி 2 ன் அறிக்கை 18 ல் கொடுக்கப்படுள்ளன.

(₹கோடியில்)

கணக்குத் தலைப்பு	நோக்கம்	தொகை
நகர் பகுதி வளர்ச்சி	சென்னை மெட்ரோ ரயில் கூட்டு நிறுவனத்திற்கான கடன்கள் மற்றும் தமிழ்நாடு நகர் புற மேம்பாட்டு நிதிக்கான கடன்கள்	4,542
கூட்டுறவு	கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு வழங்கிய குறுகிய கால கடன்	253
மின் திட்டங்கள்	தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்திற்கான கடன்கள் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி வாரியத்திற்கான கடன்கள்	379
நுகர்வோர் தொழில்கள்	அமைப்பு நிதியான உதவிகளின் கீழ் தொழில் அலகுகளுக்கு எளிய கடன் வழங்குதல் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ளவை.	457
சாலை போக்குவரத்து	தமிழ்நாடு சாலை போக்குவரத்து நிறுவனங்களுக்கு குறுகிய கால கடன்	701

5.1.6. அரசு ஊழியர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் கடன்கள் மற்றும் முன்பணங்களை திருப்பிச் செலுத்துதல்

2022-23 ஆம் ஆண்டில் திருப்பிச் செலுத்திய கடன்கள் மற்றும் முன்பணங்கள் மூலமாக ₹1,078 கோடி பெறப்பட்டது.

(₹கோடியில்)

துறை வாரியான பணிகள்/கடனாளிகள்	2022-23
சமூகத் துறை	456
பொருளாதாரத் துறை	386
அரசு பணியாளர்களால் திருப்பி செலுத்தப்பட்டது	236

இவற்றின் பெரும்பான்மையாக திருப்பிச்செலுத்தியவர்கள் நகர பகுதி வளர்ச்சி (₹363 கோடி), அரசு ஊழியர்களுக்கான கடன்கள் (₹236 கோடி), நிலுவையில் உள்ள கடன்களை (₹43,055 கோடி மீட்டெடுப்பதற்கான பயனுள்ள நடவடிக்கைகள் அரசாங்கத்தின் நிதி நிலை மேம்பட உதவும்.

5.2. கடன் மற்றும் பொறுப்புகள்

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 293 வது பிரிவு, மாநில சட்டமன்றத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படக்கூடிய ஏதேனும் இருந்தால் அத்தகைய வரம்புகளுக்குள் மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதியத்தின் பாதுகாப்பில் கடன் வாங்க மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.

தமிழ்நாடு நிதி பொறுப்புச் சட்டம் 2003 இன் படி, தமிழக மாநில அரசு நிர்ணயித்த இலக்கு, மொத்த நிலுவையில் உள்ள கடனின் விகிதத்தை மாநில மொத்த உற்பத்தி மதிப்புக்கு 2015-16 ஆம் ஆண்டில் 25.2 சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்ற நடுத்தர கால இலக்கைக் கொண்டு பரிந்துரைக்கப்படக்கூடிய சதவீதம் ஆகும்.

2022-23 ஆம் ஆண்டில் நிலுவைக் கடன் (₹6,77,255 கோழு மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 28.64 சதவீதம் ஆகும்.

மேற்கூறிய நிலுவை கடனில் ₹6,241 கோடி (2020-21) மற்றும் ₹8,095 கோடி (2021-22) அடங்கவில்லை. இது மத்திய அரசால் சரக்கு மற்றும் சேவை வரியின் இழப்பீட்டில் உள்ள பற்றாக்குறையை சரிக்கட்டுவதற்காக பேக் டு பேக் கடனாக அனுமதிக்கப்பட்டது. (மத்திய அரசின் கடித எண் எப் / எண்40 (1) / 2021-22 / நாள் 10/12/2021).

மாநில அரசின் பொதுக்கடன் மற்றும் பிற பொறுப்புகள் பற்றிய விவரங்கள் கீழ் உள்ளன (புள்ளிவிபரங்கள் ஆண்டு இறுதி வரைக்கான ஒட்டுமொத்த தொகை இருப்புகள்)

மாநில மொத்த உற்பத்தி மதிப்பிற்கு அரசு பொறுப்புகள்:

(₹கோடியில்)

ஆண்டு	பொதுக் கடன்*	மாநில மொத்த உற்பத்தி மதிப்பிற்கு சதவீதம்	பொது கணக்கு**	மாநில மொத்த உற்பத்தி மதிப்பிற்கு சதவீதம்	மொத்த பொறுப்பு	மாநில மொத்த உற்பத்தி மதிப்பிற்கு சதவீதம்
2018-19	3,21,642	*19.33*	47,094	*2.83*	3,68,736	*22.16*
2019-20	3,70,550	*20.07*	53,193	*2.88*	4,23,743	*22.96*
2020-21	4,57,188	*24.02*	61,608	*3.24*	5,18,796	*27.27*
2021-22	5,41,936	*26.24*	68,731	*3.33*	6,10,667	*29.57*
2022-23	6,15,893	*26.05*	75,698	*3.20*	6,91,591	*29.25*

*நிலுவைகளின் நிகரமாக எடுக்கப்படுகிறது.

**முன்பணங்கள், சஸ்பென்ஸ் இதர, பணம் அனுப்புதல் நிலுவைகள் நீங்கலாக.

5.3. அரசாங்க பொறுப்புகள்

அரசாங்கத்தின் பொறுப்புகள், அது திரட்டிய சந்தைக் கடன்களை (உள்நாட்டு கடன்) (திருப்பிச் செலுத்துதல்) மற்றும் இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் ஆகியவை அடங்கும். 'பிற பொறுப்புகள்', என்பது 'சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி போன்றவை', 'காப்பு நிதிகள்' மற்றும் 'வைப்புத்தொகை' ஆகியவற்றை உள்ளடக்கியது. அரசு பொறுப்புகளின் அதிகமாகும் போக்கை (மாநில மொத்த உற்பத்தி மதிப்பிற்கு) பத்தி 5.2ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

நிலுவையில் உள்ள நிதிக்கடன்களின் போக்குகள்

(₹கோடியில்)

பொறுப்புகள்	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23
உள்நாட்டு கடன்	3,04,350	3,52,625	4,29,748	5,02,205	5,67,635
மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் மற்றும் முன்பணங்கள்	17,292	17,925	27,440	39,731	48,258
சிறு சேமிப்பு மற்றும் வருங்கால வைப்பு நிதி	24,110	26,475	29,352	32,033	33,884
காப்பு நிதி	1,330	2,158	2,144	2,386	3,411
வைப்பீடுகள் மற்றும் முன்பணம்	21,654	24,560	30,111	34,312	38,403



அரசாங்கத்தின் பொதுக்கடன் மற்றும் பிற பொறுப்பு 2021-22 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 28.87 சதவீதத்திலிருந்து 2022-23 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 28.64 சதவீதமாக குறைந்துள்ளது. இது தமிழ்நாடு நிதி பொறுப்பு சட்டம் இலக்கு 25.20 சதவீதத்திற்குள் இல்லை.

5.4. உத்தரவாதங்கள் (இடைவிடாத பொறுப்புகள்)

அரசு நிறுவனங்களும், கழகங்களும் நிதித் தேவைகளுக்காக கடன்களை திரட்டுகின்றன. பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல் முறை திட்டங்களை செயல்படுத்துவதற்காக அரசு நிறுவனங்கள் மற்றும் கழகங்கள் சந்தை மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்து திரட்டிய கடன்களுக்கு மாநில அரசுகள் உத்தரவாதம் அளிக்கின்றன.

உத்தரவாத மீட்பு நிதி மார்ச் 2003இல் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டது. இந்த நிதி என்பது உத்தரவாதங்களை நிறைவேற்றாதவை உண்டாக்கும் செலவினங்களை பூர்த்தி செய்வதற்காகவே உருவாக்கபட்டது. 31 மார்ச் 2023 நிலவரப்படி இந்த நிதியில் ₹2,139 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

சட்டரீதியான நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள், கழகங்கள், கூட்டுறவு சங்கங்கள் போன்றவற்றால் எழுப்பப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்துவதற்காக (அதனுடைய அசல் மற்றும் வட்டி செலுத்துதல்) மாநில அரசு வழங்கிய உத்தரவாங்களின் நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

(₹கோடியில்)

ஆண்டு இறுதியில்	பெருமளவு உத்தரவாதம் அளிக்கப்பட்டது	ஆண்டு இறுதியில் மீதமுள்ள உத்தரவாதம்
2018-19	83,140	43,661
2019-20	4,667	47,319
2020-21	4,465	65,659
2021-22	64,176	91,975
2022-23	40,565	90,709

குறிப்பு : நிதிக் கணக்குகளின் அறிக்கை எண் 20 ல் விவரங்கள் கிடைக்கின்றன. இவை மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அமைந்தவை.

2022-23 ஆம் ஆண்டில் உத்தரவாதக் கட்டணமாக மாநில அரசு ₹968 கோடி பெற்றது. வரவு ”0075-ல் இதர பொது சேவைகள்” கீழ் கணக்கிடப்படுகிறது. மொத்த இருப்பில் உள்ள உத்தரவாத மீட்பு தொகை ₹2,150 கோடியில் ₹2,139 கோடி கருவூலபட்டியலில் முதலீடு செய்யப்பட்டது.

பகுதி 6
இதர பிற இனங்கள்

6.1 உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிறவற்றிற்கு நிதி உதவி

கடந்த ஐந்தாண்டுகளில், உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் 2018-19ல், ₹47,826 கோடியிலிருந்து 2022-23ல் ₹79,003 கோடியாக அதிகரித்துள்ளது. ஜில்லா பரிஷத்கள். பஞ்சாயத்து சமிதிகள், மற்றும் நகராட்சிகள் / மாநகராட்சிகளுக்கான மானியங்கள் (₹16,215 கோடி) இந்த ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த மானியத்தில் 20.52 சதவீத பங்களிப்பை பெற்றன. கடந்த 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட மானியத்தின் விவரங்கள் பின்வருமாறு:-

(₹கோடியில்)

ஆண்டு	2018-19	2019-20	2020-21	2021-22	2022-23
ஜில்லா பரிஷத்	337	323	388	568	432
நகராட்சிகள் மற்றும் மநகராட்சி	4,161	4,447	4,370	5,039	6,795
கிராம பஞ்சாயத்துக்கள் மற்றும் பஞ்சாயத்து சமிதிகள்	7,394	7,433	8,037	10,123	8,988
பிறவகை	35,934	38,401	57,884	66,856	62,788
மொத்தம்	47,826	50,604	70,679	82,586	79,003

(₹கோடியில்)



6.2 சரக்குகள் மற்றும் சேவை வரி

சரக்குகள் மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) ஜூலை 1 2017 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2022-23 ஆம் ஆண்டில், மாநில ஜிஎஸ்டி வசூல் 2021-22 இல் இருந்த ₹45,276.49 கோடியுடன் ஒப்பிடும்போது, ₹53,822.69 கோடியாக இருந்தது. கடந்த ஆண்டை விட ₹8,546.20 கோடி (18.88 சதவீதம்) அதிகரித்துள்ளது. இதில் ஐஜிஎஸ்டியின் முன்பண ஒதுக்கீடு ₹1,730.71 கோடி அடங்கும். மேலும், மத்திய சரக்குகள் மற்றும் சேவை வரியின் கீழ் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட நிகர வருவாயில் மாநிலம் அதன் பங்காக ₹10,945.36 கோடியைப் பெற்றது. ஜிஎஸ்டியின் கீழ் மொத்த வரவுகள் ₹64,768.05 கோடி. 2022-23 ஆம் ஆண்டில் ஜிஎஸ்டியை அமல்படுத்தியதால் ஏற்பட்ட வருவாய் இழப்பின் காரணமாக மாநிலம் ₹16,214.83 கோடி இழப்பீடாக பெற்றது. வருவாய் இழப்பீடாக பெறப்பட்ட ₹16,214.83 கோடியில், 2020-21 ஆம் ஆண்டுக்கான இழப்பீடாக ₹4,223.93 கோடியும், 2021-22 ஆம் ஆண்டின் இழப்பீடாக ₹8,169.18 கோடியும், மேலும் 2022-23 ஆம் ஆண்டின் இழப்பீடாக ₹3,821.72 கோடியும் பெற்றது.

6.3 மாநில பேரிடர் பொறுப்பு நிதி

மாநில பேரிடர் பொறுப்பு நிதியின் அரசியலமைப்பு மற்றும் நிர்வாகம் குறித்த வழிகாட்டுதல்களின் படி (பெருந் தலைப்பு -"8121-பொது மற்றும் பிற இருப்பு நிதிகள்", வட்டி தாங்கும் பிரிவின் கீழ்) மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 75 மற்றும் 25 சதவீதம் விகிதத்தில் நிதிக்கு பங்களிக்க வேண்டும். 2022-23 ஆம் ஆண்டில், மாநில அரசு மத்திய அரசின் பங்காக ₹856.80 கோடியைப் பெற்றது. இந்த ஆண்டில் மாநில அரசின் பங்கு ₹285.60 கோடி. "8121.122 மாநில பேரிடர் நிவாரண நிதி" என்ற பெருந் தலைப்பின் கீழ், மாநில அரசு ₹1,142.40 கோடியை (மத்திய பங்கு ₹856.80 கோடி, மாநில பங்கு ₹285.60 கோடி) நிதிக்கு மாற்றியது. தேசிய பேரிடர் நிவாரண நிதிக்காக மத்திய அரசிடம் இருந்து இந்த ஆண்டு எந்த தொகையும் பெறவில்லை.

6.4 ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்திடம் நிதி ஒப்படைக்கப்படாமை

ஏப்ரல் 1, 2003 அன்று அல்லது அதற்குப் பிறகு பணியமர்த்தப்பட்ட மாநில அரசு ஊழியர்கள், வரையறுக்கப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமான ஓய்வூதிய முறையின் (NPS) கீழ் உள்ளனர். திட்டத்தின் அடிப்படையில், பணியாளர் தனது அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 10 சதவீதத்தை பங்களிக்கிறார்கள். மேலும் அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 10 சதவீதம் மாநில அரசால் அளிக்கப்படுகிறது. (அனைத்திந்திய பணி ஊழியர்களைப் பொறுத்தவரை அரசின் பங்களிப்பு 14 சதவீதம்) ஆகும்.

2022-2023 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட பங்களிப்பு ஓய்வூதிய திட்டமான NPSக்கான மொத்த பங்களிப்பு ₹6,746.66 கோடி (ஊழியர்களின் பங்களிப்பு ₹3,409.52 கோடி மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு ₹3,337.14 கோடி இதில் அணைத்திந்திய பணி அதிகாரிகள் ₹4.37 கோடி மற்றும் பிறவு கணக்காளர்களுக்கு ₹0.15 கோடி அடங்கும்). அரசு₹10,683.32 கோடியை (அ) ஊழியர்களின் பங்களிப்பு ₹3,409.52 கோடி (ஆ) அரசு பங்களிப்பு ₹3,337.14 கோடி (இ) வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின் நிதி இருப்புக்கு அரசுக்கு செலுத்திய வட்டி ₹3,844.93 கோடி (ஈ) கருவூலங்கள் மூலம் பங்களிப்பு மற்றும் முந்தைய தவறான வகைப்பாட்டின் சரிசெய்தல் பரிமாற்ற உள்ளீடுகள் ₹75.33 கோடி மற்றும் (உ) அணைத்திந்திய பணிஅதிகாரிகள் அடுக்கு-2 ₹16.40 கோடி பொது கணக்கு பெருந்தலைப்பு “8342.117-வரையறுக்கப்பட்ட பங்களிப்பு மற்றும் ஓய்வூதியத் திட்டத்தின்” கீழ் மாற்றப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் (DCPS) அரசு ஆணை எண் 430 (ஆகஸ்ட் 6 2004) விதிகளின்படி நிதியின் மொத்த குவிப்பு (ஏதேனும் இருந்தால் வட்டி உட்பட) மூன்றாம் தரப்பு நிதி மேலாளருக்கு மாற்றப்பட வேண்டும் அல்லது ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏஜென்சி இருக்க வேண்டும். இருப்பினும் 19 ஆண்டுகள் கடந்த பிறகும் மாநில அரசு ஊழியர்களின் (அனைத்திய பணி தவிர) நிதி திரட்சியை இந்த மாநில அரசு மாற்றவில்லை. அதற்கு பதிலாக மாநில அரசு 2019-20 முதல் ஏல கருவூல பில்களிலும், எல்ஐசியிலும் (24 மே 2019 தேதியிட்ட தமிழ்நாடு அரசாங்கத்தின் ஆணை எண் 158 படி) ஆகியவற்றை இந்த தொகையை முதலீடு செய்துள்ளது. மார்ச் 31 2023 நிலவரப்படி இதில் உள்ள மொத்த திரட்சி ₹63,675.06 கோடி ஆகும். இதில் ₹56,638.64 கோடி எல்ஜசியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. (2022-2023 இல் ₹20,128.65 கோடி மற்றும் 2021-2022 இல் ₹36,509.99 கோடி). 2019-2020 ஆம் ஆண்டிற்கான எல்ஜசியில் இருந்து பெறப்பட்ட வட்டி தொகை ₹1,149.55 கோடியில் மேலாண்மை கட்டணங்கள் ₹20.90 கோடி சரி செய்த பிறகு அதே நிதியில் மீண்டும் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

6.5 உதவி மானியங்கள் அளித்தமைக்கு சமர்ப்பிக்கப்படாத பயன்பாட்டு சான்றிதழின் நிலவரம்

கையேடு நிலையியற் கட்டளைகள் (கணக்குகள் மற்றும் பணி வரவு) அத்தியாயம் 16 இல் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி, மானியம் பெறுபவரால் பெறப்பட்ட உதவித்தொகை தொடர்பான உரிமைகள், பயன்பாட்டுச் சான்றிதழ்கள், உதவித்தொகை பெறப்பட்ட நாளிலிருந்து பதினைந்து மாதங்களுக்குள் மானியம் பெறுபவர் அதை அனுமதித்த அதிகாரிக்கு வழங்க வேண்டும். பயன்பாட்டு சான்றிதழ்களை சமர்பிக்காத அளவுக்கு, நிதிக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள தொகை பயனாளிகளைச் சென்றடைந்தது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை, இதனால் செலவு சரியானது அல்லது இறுதியானது என உறுதியளிக்க முடியாது.

2022-23 ஆம் ஆண்டில் 31 மார்ச் 2023 வரையிலான காலகட்டத்தில் நிலுவையில் உள்ள (66.90 சதவிதம்) 97 பயன்பாட்டு சான்றிதல்கள் ₹4,195.60 கோடிக்கு சமர்பிக்கப்பட்டது. மேலும் நிலுவையில் உள்ள 111 பயன்பாட்டு சான்றிதழ்கள் ₹4,827.74 கோடியாக உள்ளது. இவை 2023 மார்ச் 31 ஆம் தேதி அன்று நிலுவையில் இல்லை.
31 மார்ச் 2023 நிலுவையின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு*	நிலுவையில் உள்ள பயன்பாட்டு சான்றிதழ்களின் எண்ணிக்கை	தொகை (₹கோடியில்)
2021-22 வரை	26	618.09
2022-23	22	817.34
மொத்தம்	48	1,435.43

* மேலே குறிப்பிட்டுள்ள ஆண்டு செலுத்தப்பட வேண்டிய வருடம் ஆகும் (அதாவது பணம் பெற்றதில் இருந்து 15 மாதங்களுக்குப் பிறகு)

31 மார்ச் 2022 நிலுவையில் உள்ள விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டு	நிலுவையில் உள்ள பயன்பாட்டு சான்றிதழ்களின் எண்ணிக்கை	தொகை (₹கோடியில்)
2020-21 வரை	17	154.88
2021-22	17	648.41
மொத்தம்	34	803.29

6.6 நிலுவையில் உள்ள தற்காலிக முன்பணங்கள்

நிதி விதிகளின் படி அரசு கருவூலத்தில் இருந்து உடனடி பட்டுவாடா செய்யத் தேவைப்படாத இனங்களுக்கு பணம் எடுக்கக்கூடாது.

பிற மாநிலங்களில் நடைமுறையில் இருப்பது போல், அவசர கால சூழ்நிலைகளில் சுருக்கமான தற்செயல் உண்டியல்களின் மூலம் பெறும் முறையை தமிழ்நாடு அரசு பின் பற்றுவதில்லை.

அதற்கு பதிலாக, தமிழ்நாடு நிதிக் குறியீடு தொகுதி 1இன் பிரிவு 99ன் கீழ் பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் தற்காலிக முன்பணம் பெறுவதற்கு அதிகாரம் பெற்றுள்ளனர். அதன்படி, பணம் பெற்று வழங்கும் அதிகாரிகள் மூன்று மாதங்களுக்குள் சரி செய்த உண்டியல்களை சமர்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

2022-23 ஆம் ஆண்டில் 1,802 தற்காலிக முன்பண பட்டியல்களால் பெறப்பட்ட தொகை ₹274.88 கோடி, அதில் 648 முன் பட்டியல்களின் தொகை ₹168.30 கோடி (61.23 சதவீதம்) மார்ச் 2023 இல் பெறப்பட்டன. 2022-23 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 425 முன் பண பட்டியல்களுக்கான (₹41.60 கோழி) விவரங்கள் மார்ச் 2023 இல் பெறப்படவில்லை. சமர்பிக்க வேண்டிய நிலுவையில் உள்ள சரிகட்டாத முன் பண பட்டியல்களின் விவரம் (31 மார்ச் 2023 அன்று) கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ஆண்டு	நிலுவையில் உள்ள முன்பண பட்டியல்களின் எண்ணிக்கை	தொகை (₹கோடியில்)
2021-22 வரை	112	110.73
2022-23	425*	41.60
மொத்தம்	**537**	**152.33**

டிசம்பர் 2022க்குப் பிறகு எடுக்கப்பட்ட 2022-23 க்குள் சரிகட்ட வேண்டிய காலம் முடியாத பில்கள் விலக்கப்படுள்ளன.

முந்தை ஆண்டு 2021-22க்கான இருப்பு தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு	நிலுவையில் உள்ள முன்பண பட்டியல்களின் எண்ணிக்கை	தொகை (₹கோடியில்)
2020-21 வரை	278	162.93
2021-22	1,371	154.88
மொத்தம்	**1,649**	317.81

6.7 ஒற்றை நோடல் நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் செலவழிக்கப்படாத தொகையின் விவரம்

இந்திய அரசாங்கத்தின் நிதி அமைச்சக கடிதம் எண் 1(13) PFMS 2020 தேதி 23.03.2021 ன் படி மத்திய அரசின் நிதியுதவித் திட்டத்தின் (CSS) கீழ் நிதியை விடுவிப்பதற்கான நடைமுறை மற்றும் ஒற்றை நோடல் நிறுவனம் (SNA) மூலம் விடுவிக்கப்பட்ட நிதியின் பயன்பாட்டைக் கண்காணிக்கும் செயல்முறையை அறிவித்தது. ஒவ்வொரு CSSக்கும், மாநில அரசாங்கத்தால் அரசாங்க வணிகத்தை நடத்துவதற்கு அங்கரிக்கப்பட்ட மற்றும் ஷெட்யூல்டு வணிக வங்கியில் SNAயின் சொந்த வங்கி கணக்குடன் அமைக்கப்படுள்ளது நடைமுறையின்படி, மாநில அரசு தனது கணக்குகளில் பெறப்பட்ட மத்தியப் அரசின் பங்கை மாநில பங்குடன் சேர்த்து சம்பந்தப்பட்ட SNAஇன் கணக்கிற்கு மாற்ற வேண்டும்.

PFMS இன் SNA அறிக்கையின்படி 2022-23 ஆம் ஆண்டில் மாநில அரசு தனது கருவூலக் கணக்குளில் மத்திய பங்காக ₹14,137.90 கோடியை பெற்றது. 31 மார்ச் 2023 அன்று நிலவரப்படி, கருவூலக் கணக்குகளின் பெறப்பட்ட ₹13,629.21 கோடி மத்தியப் பங்கையும் ₹11,311.31 கோடி மாநிலப் பங்கையும் மாநில அரசாங்கம் ஒற்றை நோடல் நிறுவனங்களுக்கு மாற்றியது.

எந்த வகை பில்களின் மூலம் அந்தக் தொகை SNAக்கு மாற்றப்பட்டது என்பதை மாநில அரசு வழங்கவில்லை. மத்திய அரசின் நிதியுதவித் திட்டத்திற்க்கும் 31 மார்ச் 2023 நிலவரப்படி, SNAகளின் வங்கிக் கணக்ககுகளில் ₹11,453.81 கோடி செலவழிக்கப்படாமல் உள்ளது.